**தலைப்பு 306 - இலங்கை புகையிரதத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 306 - இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்து முடிவுறுத்தும் முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 23 ஆந் திகதி திணைக்களத்தின் புகையிரத பொது முகாமையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்து முடிவுறுத்தும் முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று ஆகியவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 35,467.81 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 29,090.39 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 6,377.42 மில்லியன் அல்லது 17.98 சதவீதமாகக் காணப்பட்டது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 14,128.99 | 13,396.28 | 732.71 | 5.18 |
| மூலதனம் | 21,338.82 | 15,694.11 | 5,644.71 | 26.45 |
| **மொத்தம்** | **35,467.81** | **29,090.39** | **6,377.42** | **17.98** |

### 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக 20.01.01.00 ஆம் இலக்க வருமான குறியீட்டிற்காக ரூபா 6,300 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 6,521.8 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானத்தினை விஞ்சி ரூபா 221.8 மில்லியன் அல்லது 3.5 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 600.00 | 513.06 | 350.00 | 409.97 | 1,500.00 | 954.00 |

### 2.3.2 களஞ்சிய முற்பணக் கணக்கு

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 30602 என்ற களஞ்சிய முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 2,000.00 | 1,947.93 | 1,800.00 | 2,247.10 | 7,635.00 | 6,480.85 |

### 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 7002/0000/00/0450/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 24.86 மில்லியனாக இருந்தது.

### 2.5 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 376.24 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0072/000 | 5.43 |
| 6000/0000/00/0002/0097/000 | 131.38 |
| 6000/0000/00/0013/0065/000 | 178.18 |
| 6000/0000/00/0018/0056/000 | 4.83 |
| 6000/0000/00/0016/0048/000 | 56.42 |
| **மொத்தம்** | **376.24** |

### 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு, கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்து முடிவுறுத்தும் முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தது. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

2016 திசெம்பர் 09 ஆந் திகதிய 252/2016 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2 ஆவது பந்தியின் பிரகாரம் ஒதுக்கீட்டுக் கணக்கு 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு

மும்மொழிகளிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் தமிழ் மொழி பிரதி 2017 மே 09 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதாவது 39 நாட்கள் தாமதத்தின் பின்னராகும்.

**3.2 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் 11 ஆம் பந்தி |
| (ஆ) | கணனி, கணனி துணைப் பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஏஜஏ/2002/ 02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

**3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீதி உறுதிப்படுத்தல், மெய்மையாய்வுச் சபை அறிக்கை போன்ற தேவையான சான்றுகள் திணைக்களத்தில் காணப்படாமையின் காரணமாக ரூபா 6,096.89 மில்லியன் தொகைக்குரிய 04 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட 223 இருப்புத் தொகுதிகளுக்குரிய செலவிடப்பட்ட சுங்கக் கட்டணம் மற்றும் ஏனைய வரிகளுக்காக ரூபா 166,163,727 செலவினம் தீர்க்கப்படாத நாணயக் கடிதத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய பொருட்கள் உள்ளபடியாக காணப்பட்டதா என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளித்தல்**

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 2,740,000 ஆகும்.

**3.5 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 34 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 5 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) செலவின விடயமொன்றிற்காக 2016 ஆகஸ்ட் மாதம் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 1.30 மில்லியன் மேலதிக நிதிஏற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும், அந்த மொத்த நிதிஏற்பாடும் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) ஓமந்தை பளை புகையிரத வீதியை மீள அமைப்பதற்காக ரூபா 100 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 24,570,900 தொகை வேறு செயற்திட்டமொன்றிற்கு மாற்றப்பட்டதன் பின்னரும் மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க அரச செலவின முகாமைத்துவம் தொடர்பான தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் செலவு விடய இலக்கம் 1202 இன் நிதிஏற்பாட்டில் 15 சதவீதம் கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த செலவின விடயத்தின் கீழ் 13 சதவீதம் மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.6 கட்டுநிதிக் கணக்கு

மீளாய்வாண்டின் இறுதியளவில் திணைக்களத்தின் கற்கை கணக்கின் மீதிக்கும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 238.59 மில்லியன் தொகையான வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே புகையிரத பொது முகாமையாளர் கணக்கின் (8003) மீதி திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் ரூபா 649.48 மில்லியனாக இருந்ததுடன் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 977.61 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 328.12 மில்லியன் தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அந்த மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டை நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் சரிசெய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.7 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 376,237,500 தொகையான வைப்பு மீதி தொடர்பாக தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் நிதிப்பிரமாணம் 565 (3) இன் பிரகாரம் மாதாந்த மீதி இணக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 565(4) இன் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் புதிய வைப்புப் பேரேடு திறக்கப்பட்டு அதில் ஆரம்ப மீதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிப்பிரமாணம் 565 (5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காகவும் பொது மாதிரிப் படிவம் 71 இல் தயாரிக்கப்பட்ட மாதாந்த வைப்புப் பொழிப்புக்கூற்று அடுத்த மாதம் முடிவடைவதற்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 வருடங்களைக் கடந்த ரூபா 148,626,648 பெறுமதியான வைப்புப் பணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஏப்ரல் 11 ஆந் திகதிய 249/2016 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் பொது வைப்பு தொடர்பாக குறித்த பிரகாரம் இணக்கம் செய்து உரிய மாதிரிகளில் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும், ரூபா 376,237,500 தொகையான பொது வைப்பு தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.8 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 20.01.01.00 ஆம் இலக்க வருமான குறியீட்டிற்குரிய வருமான மதிப்பீட்டை தயாரித்தல், வருமானங்களைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் பணிப் பொறுப்புக்கள் என்பன கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க நிதித் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போது முன்னுரிமை வழங்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசிறைக் கொள்கைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்கின் பிரகாரம் கூட்டுமொத்தமாக ரூபா 1,566,276,874 தொகையான வருமானம் நிலுவையாக இருந்ததுடன், அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 20 வருடங்கள் வரையிலான காலவீச்சுக்குரியதாக இருந்தது. நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(இ) நிதிப் பிரமாணம் 128(2)(இ) இன் பிரகாரம் 2017 சனவரி 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டின் இரண்டாவது அரை வருடத்திற்குரிய நிலுவை வருமான அறிக்கை 2017 யூன் 15 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் மொத்த வருமானம் 3 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், மீளாய்வாண்டில் கிடைத்த வருமானத்தில் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானப் பெறுவனவில் ரூபா 794.64 மில்லியன் உள்ளடங்கியிருந்தது. அது மொத்த வருமானத்தில் 12 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(உ) புகையிரத பிரயாணிகளின் பொருள் போக்குவரத்திற்காக 2016 ஆம் ஆண்டிற்காக 12 நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 40.92 மில்லியன் தொகையும், 2000 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து 2015 ஆம் ஆண்டின் இறுதிவரை 25 நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 32.85 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 73.77 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 வருமான பாய்ச்சலின் கீழ் அறவிட வேண்டிய ரூபா 2,376.41 மில்லியன் பெறமதியான நிலுவை வருமானம், வருமானக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.9 அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

30601 ஆம் விடய இலக்க அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 93.29 மில்லியனாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) உப திணைக்களமான போக்குவரத்து அதிகாரசபை அனுராதபுரம் அலுவலகம் என்ற பெயரில் ரூபா 4.49 மில்லியன் கடன் மீதியொன்று அறவிடப்படாது காணப்பட்டது. அது தொடர்பாக 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் இலக்கம் 96 இன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய மீதிகளின் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 03 உப திணைக்களங்களில் 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 645,752 தொகையான கடன் மீதி தொடர்பாக 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து முடிவுறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொருள் உற்பத்தி, உருக்கு வேலைத்தளம், மரக்குற்றிகளை மாற்றம் செய்யும் நடவடிக்கைகள், சிற்றுண்டிச்சாலை சேவை மற்றும் நானாவித விடயங்களுக்கான 05 முற்பணக் கணக்குகளை 1987 ஆம் ஆண்டு முதல் மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 518(3) இன் பிரகாரம் அந்த முற்பணக் கணக்குகளின் பணிகளை மூடிவிட்டதன் பின்னர் அடுத்துவரும் ஆண்டின் போது கலைத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த முற்பண செயற்பாடுகளை மூடி 29 வருடங்கள் கடந்திருந்த போதிலும் கலைத்தல் பணிகள் முடிவடைந்திருக்கவில்லை.

## 3.11 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 யூன் 29 ஆந் திகதிய டீஎம்ஏ/2009/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடமொன்றிற்கு ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 தடவைகள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டின் போது 03 கூட்ட தடவைகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 3.12 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(i) புகையிரத திணைக்களத்திற்குரிய 6,000 ஏக்கர் அளவிலான காணி பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன், அதில் அனுமதியற்ற பாவனைகளில் 4,000 ஏக்கர் காணி இருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தும் அது தொடர்பான விரிவான தகவல்கள் 2017 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரையிலும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஆம் ஆண்டு முதல் ரூபா 5.08 மில்லியன் தொகையான 1,000 இலத்திரனியல் கட்டுப்பாட்டு அலகுகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தன.

(iii) 2001 ஆம் ஆண்டின் போது ரூபா 810 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட M9 வகையின் 5 என்ஜின்கள் 2004 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்தில் ஈடுபடாதிருந்ததுடன் M9-873 என்ற என்ஜின் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் 02 வருட காலஎல்லைக்குள் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது

(iv) பிரதான எந்திர பொறியியலாளர் உப திணைக்களத்திற்குரிய 44 மோட்டார் வாகன அலகுகள், 20 இயந்திர பொறிமுறை அலகுகள் மற்றும் அசைவுறும் 84 ஆதன அலகுகள் என்பன விளைவற்று மற்றும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3(2) பந்தியின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2017 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. எனினும், 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக முறைய 19 உப திணைக்களங்களின் கீழுள்ள 05 களஞ்சிய அலுவலகங்களுக்காகவும் 416 களஞ்சிய அலுவலகங்களுக்காகவும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாகவும் மற்றும் ஏனைய சிபாரிசுகள் தொடர்பாகவும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தால் ரூபா 3.50 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனமொன்று போக்குவரத்து அமைச்சிற்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) **ஏனைய தரப்பினருக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல்**

போக்குவரத்து அமைச்சிற்குரிய 04 மோட்டார் வாகனங்கள் முறையாக கையேற்கப்படாமல் நீண்ட காலமாக திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.13 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 690.33 மில்லியனாக இருந்ததுடன், அவை வருடமொன்றிற்கு குறைந்த காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**3.14 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (i) | நிதிப்பிரமாணம் 66 | 215,879,733 | நிதியை மாற்றுவதற்கான கோரல்கள் உரிய நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிமாற்றங்களுக்காக அதிகாரத்தை வழங்கும் 09 கோரல் பத்திரங்கள் 2017 சனவரி 23 ஆந் திகதி தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 103, 104, 105 மற்றும் 109 | 455,442,884 | காணாமல் போதல் / சேதமடைதலில் ஏற்படுகின்ற காலத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள், காணாமல் போனதற்கான பரிசோதனை மற்றும் அதற்குப் பொறுப்பான தரப்பினரை தீர்மானித்தல், நட்ட இழப்பு தொடர்பாக அறவிடப்படக்கூடிய ஆகக் கூடியதைத் தீர்மானித்தல் மற்றும் நட்டங்களை புத்தகங்களிலிருந்து நீக்கும் கட்டளை வழங்குதல் போன்றவைகள் தொடர்பாக குறித்த பிரகாரம் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 156(1)(அ) | 2,439,883 | குறித்த பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் 2016 ஆம் ஆண்டில் 28 சந்தர்ப்பங்களின் போது 159 விலைப் பட்டியல்களுக்காக பொருட்களை விடுவிப்பதற்குரிய தாமதக் கட்டணமாக ரூபா 2,439,883 தொகை இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப்பிரமணம் 168(2) | - | மவுண்ட மேரி விளையாட்டரங்கில் சேகரிக்கப்பட்ட வருமானத்திற்காக விநியோகிக்கப்பட்ட இரண்டு பற்றுச் சீட்டுக்களின் இரண்டாவது பிரதியில் எந்தவொரு விபரமும் குறிப்பிடப்படாமையினால் அதில் குறிப்பிடப்பட்ட பெறுமதி வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 177(1) | 420,055 | மவுண்ட மேரி விளையாட்டரங்கில் 2016 ஆம் ஆண்டின் முதல் 04 மாத காலத்தில் சேகரிக்கப்பட்ட ரூபா 420,055 தொகையான வருமானம் 26 நாட்கள் முதல் 120 நாட்கள் வரையிலான காலதாமதத்தின் பின்னர் வங்கியிலிடப்பட்டிருந்தது. |
| (vi) | நிதிப்பிரமாணம் 763 | - | குறித்த பிரகாரம் களஞ்சியக் கட்டுப்பாடு தொடர்பான பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vii) | நிதிப்பிரமாணம் 845 | - | அரச தொலைபேசிகள் தொடர்பான பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய SP/RD/2/10 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | - | அரச காணிகளின் பாதுகாப்பு தொடர்பாக திணைக்களத் தலைவரால் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், புகையிரத ஒதுக்கப் பிரதேசத்தில் குடியிருந்து வரும் அனுமதியற்றவர்களை அகற்றுவதற்காக 1979 இன் 07 ஆம் இலக்க அரசாங்கத்தின் காணிகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் தலைவர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய 3/2014 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கையின் 3 ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பந்தி | - | உத்தியோகத்தரால் எடுக்கப்படுகின்ற தொலைபேசி அழைப்புகளுக்கான கட்டணத்தை தனித்தனியாக இனங்காண்பதற்கு முடியுமான வகையில் நிறுவனத்தின் தொலைபேசி முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஈ) புகையிரதத் திணைக்களத்தின் பொது ஆலோசனைக் கோவை**

| | | |
|---|---|---|
| (i) XI ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் 2.17 ஆம் பந்தி | - | 2017 மே 30 ஆந் திகதி வரையில் குறித்த பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் 334 புகையிரத நிலையங்களின் மற்றும் பருவச்சீட்டு, பிரயாணிகள் மற்றும் பொதி வருமானம் புகையிரத நிலையக் கணக்குகளுடன் ஒப்பீடு செய்த போது தாமத காலம் 03 மாதங்கள் முதல் 07 மாதங்கள் வரையிலான காலவீச்சினைக் கொண்டிருந்தது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அவதானிப்புக்களின் பிரகாரம் 09 புகையிரத நிலையங்களின் தாமதக் காலம் 02 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையிலான காலவீச்சினைக் கொண்டிருந்தது. |
| (ii) 1998 நவம்பர் 05 ஆந் திகதிய 98 ஆம் இலக்க புகையிரத பொது முகாமையாளரின் பட்டா/ஆரம்ப முற்பணம் செலுத்தும் சுற்றறிக்கையின் 02 ix ஆம் பந்தி | 6,134,074 | ஏற்பாடுகளுக்கு முரணாக புகையிரத நிலையங்களின் நாளாந்த வருமானத்திலிருந்து அவசர முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த முற்பணம் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.15 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் வெளிநாட்டு செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட மடு – பளை மன்னார் புகையிரத வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 1,300 மில்லியனும் மற்றும் பளை – காங்கேசன்துறை புகையிரத வீதிக்காக ரூபா 2,330 மில்லியனும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த செலவினம் செலவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.16 உள்நாட்டு நிதியளித்தலின் மூலம் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புகையிரத திணைக்களத்தின் செயற்திட்ட இலக்கம் 04 இன் கீழ் திட்டமிடப்பட்ட ரூபா 4,664 மில்லியன் தொகையான 10 உள்நாட்டு செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போதும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 992 மில்லியன் தொகையான 09 செயற்திட்டங்கள் தொடர்பாக நிதிச் செயலாற்றல் 50 சதவீதத்தை விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 3.17 புகையிரத செயலாற்றல்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் போதும் 2016 ஆம் ஆண்டின் போதும் திட்டமிடப்பட்ட பிரயாணிகள் புகையிரதத்தின் எண்ணிக்கை முறையே 97.35 சதவீதம் மற்றும் 97.8 சதவீதம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எனினும், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட புகையிரத தடவைகளின் எண்ணிக்கை 8.4 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட புகையிரத தடவைகளின் எண்ணிக்கை 3.9 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பொருள் போக்குவரத்து மெட்ரிக் தொன் அளவு 8.10 சாவீதத்தாலும், பொருள் போக்குவரத்து ஓடிய கிலோமீற்றர் அளவு 7.6 சதவீதத்தாலும் மற்றும் பொருள் போக்குவரத்து வருமானம் 5.3 சதவீதத்தாலும் ஆக உயர்வடைந்து சென்றதைக் காண்பித்தது. புகையிரத பிரயாணிகள் பொருள் போக்குவரத்துச் செய்வதற்கான வசதிகளை வழங்குவதன் மூலம் புகையிரத சேவையின் பொருள் போக்குவரத்து வருமானத்தை மேலும் அதிகரித்துக் கொள்ள முடியுமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது திட்டமிடப்பட்ட புகையிரத பிரயாணத் தடவைகளில் முறையே 24.41 சதவீதம் மற்றும் 16.32 சதவீதம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 இன் முதல் ஆறு மாதத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குரிய 27 புகையிரத எண்ணெய் கொள்கலன்களில் போக்குவரத்துச் செய்வதற்காக கூட்டுத்தாபனத்தால் கோரப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்திற்கு அந்த கோரிக்கையை பூர்த்தி செய்யமுடியாதிருந்தது. அதன் காரணமாக திணைக்களத்திற்கு ரூபா 4.7 மில்லியன் அளவிலான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(உ) பெருந்தெருக்களில் வாகனங்களின் ஓட்டம் அதிகரித்ததன் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் அதிக எரிபொருள் விரயமாகுவதன் காரணமாக ஏற்படுகின்ற சுற்றாடல் மாசுபடுதலைக் கவனத்தில் கொள்ளும் போது புகையிரம் மூலம் பொருட்களை போக்குவரத்து செய்வதன் மூலம் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் நலன்களுடன் உள்ள நிலைமையை தோற்றுவிக்க முடியும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறு இருக்கும் போது நிறுவனத்தில் திட்டமிடப்பட்ட புகையிரத தடவைகளின் எண்ணிக்கையை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை திருப்திகரமான நிலையில் இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் புகையிரதத்தில் செல்லுபடியான பிரயாணச் சீட்டு இன்றி பிரயாணம் செய்த பிரயாணிகளின் எண்ணிக்கை 13,267 ஆக் இருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது மாதத்திற்கு அண்ணளவாக 1,106 பிரயாணிகள் அளவாக இருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது அந்த எண்ணிக்கை முறையே 12,826 மற்றும் 1,069 ஆக இருந்தது. அதன் பிரகாரம் உள்ளக நிர்வாக பலவீனங்களினால் இவ்வாறு கணிசமான பிரயாணிகளின் அளவு புகையிரதத்தில் பிரயாணச் சீட்டின்றி பயணஞ் செய்திருந்ததுடன் திணைக்களத்திற்கு அதன் மூலம் பாரியளவான வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படுகின்றது. இந்த நட்டத்தை குறைப்பதற்காக நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி புதிய முறைமையொன்றின் தேவையொன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(எ) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் புகையிரத வருமானத்தை 09 சதவீதம் வரை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், உள்ளபடியான வருமான உழைத்தலின் அதிகரிப்பு 07 சதவீதமாக இருந்தது. மேலும், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டுடின் போது வருமானத்தை 10 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான வருமான அடைவு 03 சதவீதமாக இருந்தது.

(ஏ) திணைக்களத்தால் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக பிரயாணிகள் புகையிரத பிரயாண தடவைகளின் திட்டமிடல் முறையே 130,060 தடவைகள் 119,135 மற்றும் 125,365 பிரயாணத் தடவைகளாக இருந்தன. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பிரயாணத் தடவைகளின் திட்டமிடல் முறையே 8.3 சதவீதம் மற்றும் 3.6 சதவீத குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ஐ) 2016 ஆம் ஆண்டில் புகையிரத பிரயாண தடவைகள் 125,365 திட்டமிடப்பட்டிருந்தும் உள்ளபடியான பிரயாணிகள் புகையிரத பிரயாணத் தடவைகள் 122,621 மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தது. அதன் பிரகாரம் குறைவாக ஓட்டப்பட்ட பிரயாணத் தடவைகளின் எண்ணிக்கை 2,744 ஆகும்.

(ஒ) 2014 திசெம்பர் 12 ஆம் திகதி பாராளுமன்ற வெளியீட்டு இல 351 இன் பிரகாரம் பிரயாணிகள், மக்கள் மற்றும் பொருள் போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒட்டு மொத்த பிரயாணிகள் போக்குவரத்து 20 சதவீதத்தாலும், பொருட்கள் போக்குவரத்து 10 சதவீதத்தாலும் அதிகரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் முக்கியமானதென வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், 2015 ஆம் ஆண்டில் குறித்த நேரத்தில் பிரயாணம் செய்யாத புகையிரத தடவைகளின் எண்ணிக்கை 60.51 சதவீதமாக இருந்தமையும், 2016 ஆம் ஆண்டின் போது அது 52.53 சதவீதமாக இருந்தமையும் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. நவீன தொழில்நுட்பத்தை பின்னபற்றி காலத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் தமது சேவைகளை அபிவருத்தி செய்து குறித்த நேரத்தில் பிரயாணம் செய்கின்ற புகையிரத தடவைகளின் எண்ணிக்கையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஓ) 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தின் மூலம் பிரயாணிகளின் போக்குவரத்து கிலோ மீற்றர்களின் எண்ணிக்கையை 5 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் போது ஓட்டத்தில் ஈடுபடக்கூடிய புகையிரத என்ஜின்களின் எண்ணிக்கை 239 ஆக இருந்த போதிலும் 174 மாத்திரமே ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.18 வங்கிக் கணக்குகளை செயற்பாடுத்தவதிலான குறைபாடுகள்

### (அ) செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள்

திணைக்களத்தால் பேணப்படுகின்ற வங்கி நடைமுறைக் கணக்கொன்று 2015 ஒக்தோபர் மாதம் முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் கணக்கை இரத்துச் செய்வதற்கு 2017 ஏப்ரல் மாதம் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புகையிரத திணைக்களத்தால் வங்கிக் கணக்கிற்குரிய 2017 யூலை மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற சீராக்கம் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்ததும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களை விஞ்சிய ரூபா 47,755 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வங்கி நடைமுறைக் கணக்கிற்குரியதாகத் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் மதிப்பிழந்த காசோலைகளாக ரூபா 206,182 மீதியொன்று காண்பிக்கப்பட்டதுடன் அதில் ரூபா 144,082 பெறுமதியான காசோலைகள் தொடர்பான விரிவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது.

(iii) நடைமுறைக் கணக்கிற்குரிய இனங்காணப்பட்ட ரூபா 187,910 பெறுமதியான வரவு மீதி மற்றும் ரூபா 17,624 செலவு மீதி என்பன இணக்கக் கூற்றில் சீர் செய்யப்படாத மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**3.19 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தில் உருக்கு வேலை செய்யும் இயந்திரம் பொருத்தும் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு திணைக்களத்திற்கு இயலுமாக இருந்த போதும் செயலாற்றல் மதிப்பீடின்றி அந்தப் பணி வெளித்தரப்பினருக்கு ரூபா 31.45 மில்லியனுக்கு கையளிக்கப்பட்டிருந்தது இந்தப் பணிகள் 2016 ஒக்தோபர் 24 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2017 யூலை 30 வரையிலும் அந்தப் பணி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 150 மில்லியன் பெறுமதியான நிலக்கீழ் உருக்கு வேலைசெய்யும் இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் இது சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்களாக இருந்தது.

**3.20 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் இடம்பெற்றிருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) S 10 வகுப்பின் புகையிரத என்ஜினை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்கான 180 Injector கொள்வனவு செய்வதற்காக ஒரு வெளிநாட்டு நிறுவனத்திலிருந்து மாத்திரம் ஒரு அலகிற்காக யூரோ 1455.39 வீதம் யூரோ 261,970.20 (FOB) கூறுவிலை கோரப்பட்டிருந்தது. அதற்காக திணைக்களத்தால் உரிய மாதிரிகளும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்தால் 200 அசிட் பற்றரிகளை கொள்வனவு செய்வதற்காக ஆரம்பமாகக் கோரப்பட்ட SRS/F/6961 ஆம் இலக்க பெறுகைகள் இரத்துச் செய்யப்படாமல் அந்நிய பெறுகை செயற்பாடுகளுக்காக மீண்டும் SRS/F/7022 ஆம் இலக்க பெறுகை நடவடிக்கைகளுக்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

(இ) புகையிரத குறுக்கு வீதி (Level Crossing) 200 ஐ கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகளின் போது 05 வழங்குனர்களினால் பல்வேறு அலகுகளில் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அக்கூறுவிலைகள் பொது நிதி அலகிற்கு மாற்றம் செய்யப்படாமல் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், கூறுவிலைகள் விலைக்காப்புறுதி வாடகைபெறுமதியாக இருந்ததா என்பது தொடர்பான விளக்கமாக சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே குறிப்பிட்ட நபர்களிடமிருந்து 50 சதவீதத்தை விட அதிகரித்த அளவில் பொருத்தமற்ற நிறுவனத்திற்கு பெறுகைச் செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 7,541,577 பெறுமதியான 200 பற்றரிகளை கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகளுக்குரிய ஒப்பந்த ஆவணங்களின் பிரகாரம் 21 தினங்களுக்குப் பின்னர் குறித்த தரப்பினரால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பெறுகை நடவடிக்கையின் பொறுப்புக் காலத்தை வெளிப்படுத்தும் வகையில் செயலாற்றல் பிணை முறிவும் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.21 நட்டமும் இழப்பும்

--------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) வெயாங்கொட புகையிரத நிலையத்திற்குரிய 06 கடைகள் 2003 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமையின் காரணமாக அண்ணளவாக ரூபா 4,752,000 நட்டமொன்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) தொலைபேசிப் பட்டியலை மீளளிப்பதற்காக மாதாந்தம் படியொன்றை பெறும் உத்தியோகத்தர்களால் திணைக்களத்திற்குச் சொந்தமான தொலைபேசி ஒன்றை தனது தனிப்பட்ட வீட்டிற்கு எடுத்துச் சென்று பயன்படுத்தியிருந்தார். 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக அதன் தொலைபேசிக் கட்டணமாக ரூபா 344,598 தொகை திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகையை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காலாவதியாகிச் சென்ற மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருட்களிலிருந்து ஏற்பட்ட நட்டமாக ரூபா 13,829,758 மீதியொன்று பல வருட காலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 38,397,123 பெறுமதியான 06 நாணயக் கடிதங்களின் கீழ் இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட பொருட்கள் 2017 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

## 3.22 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்வேறு தரப்பினரிடமிருந்து காலரீதியில் அறவிடப்பட வேண்டிய நட்ட இழப்புக்கள் முறையான பிரகாரம் அறவிடப்படாமல் பலவருட காலமாக ஒதுக்கீட்டுக் கணக்கில் நட்ட இழப்பின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்த நட்ட இழப்பை அறவீடு செய்யும் இயலுமை தொடர்பாக கண்டறியாமல் மீளாய்வாண்டில் அதில் ஒரு பகுதியை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(ஆ) புகையிரத திணைக்களத்திற்குரிய மவுண்ட் மேரி விளையாட்டரங்கின் நிர்வாக நடவடிக்கைகள் திருப்திகரமான நிலையில் காணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது Ovin Gas கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனமொன்றிடம் காணப்பட்ட ரூபா 2,500,000 பெறுமதியான வைப்பிற்கான உடன்படிக்கைக் காலம் 2015 மார்ச் 04 ஆந் திகதியில் முடிவடைந்திருந்த போதிலும், உரிய வைப்புப் பணத்தை இதுவரை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புகையிரத உதிரிப் பாகங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கட்டளைகளுக்கு முரணாக வழங்குனரினால் வழங்கப்பட்ட ரூபா 172,543 தொகையான 02 விடயங்கள் களஞ்சியத்திற்கு கிடைத்து 1½ வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் அந்த விடயங்களை மீண்டும் வழங்குனருக்கு அனுப்பி அதற்குப் பதிலாக சரியான பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரதான இயந்திரப் பொறியியலாளர் உப திணைக்களத்தால் இண்டெண்டு இலக்கம் 3283/10 இன் கீழ் புகையிரதத்தைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 197,521 பெறுமதியான உதிரிப்பாகங்களின் தேவையொன்று அறிவித்து 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த போதும் அந்த பொருட்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் களஞ்சியத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிரதான இயந்திரப் பொறியியலாளர் உப திணைக்களத்தால் அவசர தேவைக்காக 2012 ஏப்ரல் மாதம் 200 Lead பற்றரிகள் கொள்வனவு செய்வதற்கு கோரப்பட்டிருந்த போதிலும் உரிய பொருட்கள் 2014 செப்தெம்பர் மாதம் 09 ஆந் திகதியே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(எ) திணைக்களத்தில் காணப்படுகின்ற சராசரியான இருப்பு விநியோகிக்கப்பட்ட இருப்பின் சதவீதமாக மிக உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் இருப்புக் கட்டுப்பாட்டு தொடர்பாக சரியான மதிப்பீடு மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இருப்புக்கள் பொருத்தமான பிரகாரம் அகற்றுவதற்கு முகாமையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே களஞ்சியத்திற்கு பொருட்கள் கிடைக்காமை, கணக்குகளை நாளதுவரையாக்குவதற்கு தேவையான தகவல்கள் கிடைக்காமை மற்றும் களஞ்சிய முகாமைத்துவத்தில் காணப்பட்ட பல்வேறு நலிவுகள் போன்றவற்றினால் 18 வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத நாணயக் கடிதங்களின் பெறுமதி ரூபா 703.84 மில்லியன் தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஏ) விஷேட புகையிரதம் வாடகைக்கு வழங்கல்

----------------------------------------------------------------------------

சாதாரண புகையிரதப் பெட்டிகளை சொகுசு பெட்டிகளாக நவீனமயப்படுத்தி திணைக்களத்தால் ஓட்டத்தில் ஈடுபடுத்தும் புகையிரதத்துடன் அவை இணைக்கப்பட்டு ‘‘எக்ஸ்போ றேல்’’ மற்றும் ‘‘ராஜதானி எக்ஸ்பிரஸ்’’ என்ற பெயரில் விஷேட சொகுசு பிரயாணிகள் புகையிரதச் சேவையினை நடாத்திச் செல்வதற்காக திணைக்களத்தால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக வழங்கிய ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த பெறுகை நடவடிக்கைகளுக்காக இலத்திரனியல் மற்றும் அச்சு நடவடிக்கைகளின் மூலம் விளம்பரத்தை வழங்காமல் இரண்டு தனியார் கம்பனிகளுடன் கலந்துரையாடி 05 வருட காலத்திற்காக சேவை ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 306.02 மில்லியன் ஒப்பந்த விலையின் அடிப்படையில் கையளிக்கப்பட்ட இந்த ஒப்பந்தத்திற்காக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 702 இன் பிரகாரம் குறித்த மாதிரிகளில் கைச்சாத்திடுவதற்குப் பதிலாக உரிய கம்பனியால் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை மாதிரியின் அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(iv) சேவையினை நடாத்திச் செலவ்தற்காக கையளிக்கப்பட்ட கம்பனியுடன் உரிய பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(v) பெட்டிகளின் நவீனமயப்படுத்தும் ஒழுங்கு முறைகள், பெட்டிகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களின் மீளளிப்பு மற்றும் நவீனமயப்படுத்தியதன் பின்னர் பெட்டிகளில் இணைக்கப்படுகின்ற உப பாகங்களின் உரித்து போன்றவை தொடர்பாக குறித்த விடயங்கள் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வாடகை உடன்படிக்கையின் 5(ஏ) நிபந்தனையின் பிரகாரம் மாதாந்த வாடகை கணிப்பிடப்பட்டு ஒவ்வொரு மாதமும் திணைக்களத்தால் அறவிட வேண்டியிருந்த போதிலும், உரிய பட்டியல்களைச் சமர்ப்பிப்பதற்காக 09 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையிலான காலதாமத மொன்று ஏற்பட்டிருந்தது.

(vii) 2011 செப்தெம்பர் 25 ஆந் திகதி முதல் 2016 மார்ச் 28 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக உரிய கம்பனிகளிடமிருந்து ரூபா 306.02 மில்லியன் தொகையொன்று அறவிட வேண்டியிருந்த போதிலும், அந்தத் தொகை பின்னர் ரூபா 204.16 மில்லியன் வரை ரூபா 101.86 மில்லியனால் முறையான அங்கீகாரமின்றி குறைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே உட்படிக்கையின் பிரகாரம் பெட்டியொன்றுக்காக இலக்கிடப்பட்ட பிரயாணிகளின் எண்ணிக்கை 39 ஆக இருந்த போதிலும், அது முறையான அங்கீகாரமின்றி 28 வரை குறைக்கப்பட்டிருந்தது.

(viii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டு 05 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும், இதுவரையில் உரிய கம்பனியால் எந்தத் தொகையும் செலுத்தப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக முறையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் காணப்பட்ட நிபந்தனைகளின் வழுக்களின் காரணமாக உரிய கம்பனிகளுக்கு எதிராக வலுவான சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது.

(x) உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய தாமதக் கட்டணம் ரூபா 12,450,120 ஆக இருந்த போதிலும், உரிய கம்பனிகளிலிருந்து இந்தப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(xi) உடன்படிக்கைக் காலம் முடிவடைந்ததன் பின்னரும் நிலுவைக் கட்டணத்தை அறவிடாமல் அக் கம்பனியிலிருந்தே உரிய சேவை தொடர்ச்சியாகப் பெறப்பட்டிருந்தது.

(xii) உரிய கம்பனிகளின் செயற்படுநிலை தொடர்பான விடயங்கள் அறிக்கையிடப்படாமல் சேவைக் காலத்தை நீடித்துக் கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(ஐ) வைஸ்ரோய் விஷேட புகையிரதத்தை வாடகைக்கு வழங்குதல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நான்கு பெட்டிகளுடன் பரந்த என்ஜினையுடைய வைஸ்ரோய் புகையிரதத்தின் ஓட்டத்திற்காக தனியார் கம்பனிக்கு 1986 ஆம் ஆண்டிலிருந்து வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த வாடகை உடன்படிக்கை காலத்தின் போது கம்பனியிடமிருந்து புகையிரத திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய வாடகைக் கட்டணம் ரூபா 9.79 மில்லியன் மற்றும் பழுதுபார்த்தல் கட்டணம் ரூபா 6.12 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 15.91 மில்லியன் கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்டிருக்கும் போது 2016 மே 02 ஆந் திகதி முதல் 2021 மே 01 வரை 05 வருட காலத்திற்கு மீண்டும் வாடகைக்கு வழங்குவதற்கு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த சேவை ஒப்பந்தத்திற்காக நிதிப்பிரமாணம் 702 இன் பிரகாரம் குறித்த மாதிரிப் படிவத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் குறித்த பிரகாரம் தபமதக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உடன்படிக்கையின் பிரகாரம் நுகர்வோர் விலைக் குறிகாட்டியின் பிரகாரம் கட்டணத் திருத்தங்களும் மேற்கொள்ளப்படாதிருந்த இந்த சேவையை நடாத்திச் செல்வதற்காக திணைக்களத்தால் பாரியளவான கிரயமொன்று செலவிடப்படுகின்ற போதிலும் அதனைக் கணிப்பிடுவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) சொகுசு பிரயாணிகள் சேவைக்காக T, 515 இரயில் கார் வண்டியை வாடகைக்கு வழங்கல்

---

இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கில் முன்னோடியாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை போக்குவரத்துச் செய்வதற்காக திணைக்களத்திற்குச் சொந்தமான 32 பிரயாணிகள் பயணம் செய்யக்கூடிய இரயில் கார் வண்டி தனியார் கம்பனிக்கு 05 வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் உரிய செவைக்காக உரிய சேவைக்காக முறையான பெறுகை நடைமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிப்பிரமாணம் 702 இன் பிரகாரம் குறித்த மாதிரிப்படிவத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் சேவையினை நடாத்திச் செல்வதற்காக திணைக்களத்தால் உரிய மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

மேற்கூறப்பட்ட வாடகை உடன்படிக்கை 3 ½ வருட காலம் கடந்திருந்த போதிலும் உரிய இரயில் கார் வண்டி 09 தடவைகள் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபட்டு ரூபா 880,212 வருமானம் பெறப்பட்டிருந்தது. எனினும், வண்டியை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 2,317,081 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்த சேவையை ஆரம்பிக்கும் நோக்கமும் நிறைவேற்றப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டதுடன் அந்த இரயில் கார் வண்டி ஓட்டத்தில் ஈடுபடுகின்ற சகல பிரயாணத் தடவைகளுக்காகவும் திணைக்களத்திற்கு பாரியளவிலான நட்டம் ஏற்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

(ஓ) கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் கட்டிட வசதிகளை வாடகைக்கு வழங்குதல்

---

நிதிப்பிரமாணம் 702 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த மாதிரிப் படிவத்தில் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமல் சுற்றுலாத் தகவல்களை வழங்குவதற்காக ‘‘இரயில் டுவர்ஸ்’’ என்ற பெயரில் அலுவலகமொன்றை நடாத்திச் செல்வதற்காக திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடத்தின் ஒரு பகுதி 1987 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தின்

ஒரு பகுதிக்காக ரூபா 1,320,000 வாடகைத் தொகை செலுத்தாமை தொடர்பாக கம்பனிக்கு எதிராக திணைக்களத்தால் வழக்கு தொடுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 40,000 வீதம் மாதாந்த வாடகை தீர்மானிக்கப்படும் போது அரசாங்கத்தின் விலை மதிப்பீடும் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. மாதமொன்றிற்கு ரூபா 40,000 வீதம் 05 வருடங்களுக்காக வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே திறந்த பெறுகை நடைமுறைகளின்றி மீண்டும் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை 05 வருட காலத்திற்காக மாதாந்தம் ரூபா 120,000 வாடகை தொகையொன்றைச் செலுத்துவதன் கீழ் உரிய கம்பனிக்கு மீண்டும் குறித்த கட்டிடத்தின் பகுதி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஔ) றாகம புகையிரத நிலைய வளவிற்கு அடுத்தாலுள்ள புகையிரத ஒதுக்கப் பிரதேசத்தை வாடகைக்கு வழங்குதல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பூக்கன்றுகள் விற்பனை கடையொன்றை நடாத்திச் செல்வதற்காக திணைக்களத்திற்குச் சொந்தமான காணியொன்று 2012 யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2013 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 210,000 வருடாந்த வாடகையொன்றைச் செலுத்துவதன் கீழ் தனியார் தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

தற்காலிக அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த வாடகைக்கு வழங்கல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுக் காணப்பட்டதுடன் வாடகைக்குப் பெற்ற தரப்பினரால் ரூபா 447,250 வாடகைப் பணம் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்தமயும் அவதானிக்கப்பட்டது.

இந்தக் காணியை வாடகைக்கு வழங்கியதன் நோக்கம் பூக்கன்றுகளின் விற்பனையை நடாத்திச் செல்வதாக இருந்த போதிலும், இதுவரையில் உரிய இடத்தில் வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனங்கள் தரித்து வைக்கும் இடமாகப் பேணிச் செல்லப்பட்டு உரிய வாடகையாளரினால் பாரியளவிலான வருமானமொன்று உழைக்கப்படுகின்றமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.

**3.23 மனிதவள முகாமைத்துவம்**

---

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 212 | 95 | 117 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 451 | 101 | 350 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 10,958 | 6,784 | 4,174 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 8,601 | 7,885 | 716 | - |
| (v) | ஏனையோர்(அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 2,107 | - | 2,107 |
| | **மொத்தம்** | **20,222** | **16,972** | **5,357** | **2,107** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 01 ஆந் திகதிய DMS/1142/V-II ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக 2015 ஆம் ஆண்டின் போது அமைய / நாட்கூலி அடிப்படையில் 519 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2009 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அரசாங்க கணக்குகள் குழுவினால் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் திருத்தப்பட வேண்டியதன் தேவை கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2017 யூலை 30 வரை ஆட்சேர்க்கும் நடைமுறைகள் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படாமல் ஆட்சேர்ப்பும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2017 சனவரி 11 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் புகையிரத திணைக்களத்திற்குரிய ஊழியர் தரவுகள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை 2017 யூலை 30 வரையும் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புகையிரத திணைக்களத்தால் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியினர் தரவுகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது சிரேஷ்ட நிலையில் முகாமைத்துவ பதவிகளில் வெற்றிடங்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 55 சதவீதமாக இருந்தது. நிறுவனத்தின் தூர இலக்கு மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உதவும் வகையில் பிரதான நபர்களின் பற்றாக்குறை முன்னைய ஆண்டுகளை விட மீளாய்வாண்டின் போதும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இது நிறுவனத்தின் செயலாற்றல் குறைவடைவது தொடர்பில் நேரடியான தாக்கம் செலுத்தியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த பதவியணியினர் எண்ணிக்கை திணைக்களத்தின் அந்தந்த உப திணைக்களத்தின் பிரகாரம் பிரிந்து செல்லும் முறைமையைக் காண்பிக்கின்ற பட்டோலையொன்று திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மனித வளங்கள்

திணைக்களத்தால் 2008 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உணவுத் திணைக்களத்தின் உருக்குத் துறையின் 02 உத்தியோகத்தர்களின் சேவை முறையற்ற வகையில் பெறப்பட்டிருந்தது.

(எ) ஓய்வூதியக்காரர்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தல்

இலங்கை புகையிரத திணைக்களத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக தகைமை பெற்ற நபர்களை ஆட்சேர்ப்பதற்குப் பதிலாக திணைக்களத்தில் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற 60 வயதிலிருந்து 67 வயது வரையான வீச்சிலுள்ள 154 உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த உத்தியோகத்தர்களுக்கிடையே என்ஜின் சாரதிகள், புகையிரத பாதுகாப்பாளர்கள் மற்றும் 94 சாரதி உதவியாளர்கள் இருந்தமையின் காரணமாக எதிர்காலத்தில் அவ்வாறான விஷேட பணிகளுக்காக உத்தியோகத்தர்களை சேர்த்தல் மற்றும் பயிற்சியளித்தல் என்பன பிரச்சினைக்குரிய விடயமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.